Nestlé Good food, Good life

# பத்திரிகை வெளியீடு

கொழும்பு, 27 ஜுன் 2024

## நெஸ்லே லங்கா நிறுவனம், பொறுப்புணர்வுடன் கழிவை நிர்வகிக்கும் நேர்மறை நடத்தை மாற்றத்தினை எதிர்கால தலைமுறைகள் மத்தியில் ஊக்குவித்து வருகின்றது

*கல்வி அமைச்சு மற்றும் மத்திய சுற்றாடல் அதிகாரசபை ஆகியவற்றின் ஒத்துழைப்புடன் அகில இலங்கை பாடசாலைகள் மட்டத்தில் ஓவியப் போட்டியொன்றை நடாத்தியுள்ளது*

'ஓவிய வடிவில் உணர்வுகளை வெளிப்படுத்தி பூமித்தாயைப் பேணிப் பாதுகாத்தல்' (Preserving Mother Earth through the Expression of Art) என்ற பெயரில் நெஸ்லே லங்கா நிறுவனம் அகில இலங்கை பாடசாலைகள் மட்டத்தில் ஏற்பாடு செய்திருந்த ஓவியப் போட்டியானது கடந்த வாரம் நிறைவடைந்ததுடன், கனிஷ்ட மற்றும் சிரேஷ்ட பிரிவுகளின் வெற்றியாளர்களுக்கு விருதுகள் வழங்கப்பட்டுள்ளன. இலங்கையில் எதிர்கால தலைமுறைகள் மத்தியில் பொறுப்புணர்வுடன் கழிவுகளை நிர்வகிப்பது தொடர்பான விழிப்புணர்வைத் தோற்றுவிக்க உதவுகின்ற ஒரு முயற்சியாக, பாடசாலை கழிவு முகாமைத்துவ நிகழ்ச்சித்திட்டத்தின் ஒரு நீட்டிப்பாக, கல்வி அமைச்சு மற்றும் மத்திய சுற்றாடல் அதிகாரசபை ஆகியவற்றுடன் இணைந்து, உலக சுற்றுச்சூழல் தினத்தைக் கொண்டாடும் வகையில் இப்போட்டி ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது. இந்நிகழ்ச்சித்திட்டமானது இந்த ஆண்டில் நாடெங்கிலுமுள்ள 800 க்கும் மேற்பட்ட பாடசாலைகளைச் சேர்ந்த சுமார் 400,000 மாணவர்களை எட்டியுள்ளமை குறிப்பிடத்தக்கது. நாடெங்கிலுமுள்ள பாடசாலைகளை பிரதிநிதித்துவப்படுத்தும் வகையில், 80,000 நுழைவுகளுடன் இந்த ஓவியப்போட்டிக்கு பலத்த வரவேற்புக் கிடைத்தமை சிறப்பம்சமாகும்.

"பாடசாலை கழிவு முகாமைத்துவ நிகழ்ச்சித்திட்டமானது, கழிவுகளற்ற எதிர்காலமொன்றைத் தோற்றுவிப்பதற்கான எமது பயணத்தில் மிக முக்கியமானதொரு முயற்சியாகும். பொறுப்புணர்வுமிக்க வழியில் கழிவை நிர்வகிப்பது தொடர்பில் பாடசாலை மாணவர்களுக்கு அறிவூட்டுவது, கழிவை சேகரித்தல் மற்றும் தரம் பிரித்தல் ஆகியவற்றை வலுப்படுத்தி, நேர்மறை நடத்தை மாற்றத்தினை ஊக்குவிக்க உதவுகின்றது. இப்பயணத்தில், எமது பிளாஸ்திக் பொதியிடல் செயல்பாடானது மீள்சுழற்சி செய்யப்படக்கூடியதாகவும், மீள்பாவனை கொண்டதாகவும் மாற்றுவதற்கு தொடர்ச்சியான நடவடிக்கைகளை மேற்கொண்டு, 2025 இல் எமது பிளாஸ்திக் பொதியிடலில் 95% பங்கு மீள்சுழற்சி செய்யப்படக்கூடியவையாக வடிவமைப்பதை உறுதி செய்வதில் நாம் தொடர்ந்தும் மிகவும் அர்ப்பணிப்புடன் செயற்பட்டு வருகின்றோம். வளர்ந்துவரும் திறமைசாலிகளின் படைப்பாற்றல்களை வெளிக்கொண்டு வருவதற்கான ஒரு களமாக அமைந்துள்ளது மட்டுமன்றி, பசுமையான மற்றும் தூய்மையான எதிர்காலத்தை அமைப்பதற்கு தேவையான நடவடிக்கைகளின் முக்கியத்துவத்தையும் வலியுறுத்துவதற்கு உதவியுள்ள இந்த ஓவியப் போட்டியை ஏற்பாடு செய்ய உதவியமை எமக்கு மிகவும் மகிழ்ச்சி அளித்துள்ளது. இதில் பங்குபற்றியவர்கள் மற்றும் வெற்றியாளர்கள் அனைவருக்கும் எனது இதயபூர்வமான பாராட்டுக்கள்!" என்று நெஸ்லே லங்கா நிறுவனத்தின் முகாமைத்துவப் பணிப்பாளர் திரு. பேர்னி ஸ்டெ∴பான் அவர்கள் குறிப்பிட்டார்.

வெற்றியாளர்களாக தெரிவுசெய்யப்பட்டவர்களுக்கு விருது அங்கீகாரங்களை வழங்கும் முகமாக 2024 ஜுன் 13 அன்று கொழும்பு கோதமி மகளிர் பாடசாலையில் நிகழ்வொன்று ஏற்பாடு செய்யப்பட்டது. கல்வி அமைச்சர் கௌரவ, கலாநிதி சுசில் பிரேமஜயந்த, மத்திய சுற்றாடல் அதிகாரசபையின் தலைவர் திரு. வெனுர பெர்னாண்டோ, கோதமி மகளிர் பாடசாலையின் அதிபர் திருமதி சுனேத்ரா விக்கிரமசிங்க உள்ளிட்ட இதில் கைகோர்த்த நிறுவனங்களின் அதிகாரிகள் பலரும் இந்நிகழ்வில் கலந்து சிறப்பித்துள்ளனர்.

"இந்த ஓவியப் போட்டியானது, சூழலைப் பாதுகாத்தல் மற்றும் நிலைபேற்றியல் ஆகியவற்றை நோக்கிய தமது அர்ப்பணிப்பை வெளிப்படுத்துவதற்கான வாய்ப்பினையும், ஒரு மேடையையும் மாணவர்களுக்கு வழங்கியுள்ளது மட்டுமல்லாது, திறமை படைத்த இளம் ஓவியர்கள் மற்றும் புத்தாக்குனர்கள் தமது சிந்தனைகளை கலை வடிவில் முன்வைப்பதற்கும் வழிவகுத்துள்ளது. பாடசாலையின் ஆரம்ப காலம் தொட்டே சிறுவர்கள் மத்தியில் சுற்றுச்சூழல் மீதான பொறுப்புணர்வை வளர்க்க வேண்டும் என்பதில் கல்வி அமைச்சு உறுதியான நம்பிக்கை கொண்டுள்ளது. எமது பூமியைப் பேணிப் பாதுகாப்பதில், விழிப்புணர்வைத் தோற்றுவித்து, கூட்டுப் பொறுப்புணர்வை

வளர்க்கும் ஒரு சிறந்த வெளிப்பாடாக இந்நிகழ்வு அமைந்துள்ளது,'' என்று கல்வியமைச்சரான கௌரவ கலாநிதி சுசில் பிரேமஜயந்த அவர்கள் குறிப்பிட்டார்.

மத்திய சுற்றாடல் அதிகாரசபையின் தலைவர் திரு. வெனுர பெர்னாண்டோ அவர்கள் தனது எண்ணங்களைப் பகிரும் போது, ''நாடெங்கிலுமிருந்து திறமைமிக்க இளம் ஓவியர்கள் இதில் பங்குபற்றியமையைக் காண்பது உண்மையில் எமக்கு மிக்க மகிழ்ச்சி அளிக்கின்றது. பிளாஸ்திக் மாசு தற்போது பாரதூரமானதொரு பிரச்சனையாக காணப்படுவதால், தமது கலைத் திறமைகள் மூலமாக பொறுப்புணர்வுமிக்க வழியில் கழிவை அகற்றுவது தொடர்பான விழிப்புணர்வை அதிகரித்து, சிறுவர்களுக்கு வலுவூட்டி, அவர்களுடனான ஈடுபாடுகளைப் பேணுவதற்கான சிறந்ததொரு மேடையாக இம்முயற்சி காணப்படுகின்றது. இந்த ஓவியப்போட்டியானது இளம் தலைமுறையினர் மத்தியில் சூழலைப் பாதுகாக்கும் பேரார்வத்தைத் தூண்டி, எமது நாட்டிற்கு பசுமையான மற்றும் கூடுதல் சுபீட்சம்மிக்க எதிர்காலத்தை வடிவமைக்கும் சிந்தனையை வளர்க்கும் என நான் உண்மையாக நம்புகின்றேன்,'' என்று குறிப்பிட்டார்.

இரு பிரிவுகளிலிருந்தும் வெற்றியாளர்களின் விபரம் வருமாறு:

கனிஷ்ட பிரிவு: முதலாம் இடம் - **ஈ.ஜி. கவித்மா இந்துவரணி**, மகாமாய மகளிர் பாடசாலை; இரண்டாம் இடம் - **ஹெட்டியாராச்சிகே லக்மினி மதுராங்கி**, ஆனந்தா மகளிர் வித்தியாலயம்; மூன்றாம் இடம் - **என்.ஜி.கே.வி. கித்மல் நாமல்கமுவ**, எஹலியகொடை தர்மபால மகா வித்தியாலயம் மற்றும் **ஜி.ஏ. ஜிதுலி யுமல்யா**, மியூசியஸ் கல்லூரி.

சிரேஷ்ட பிரிவு: முதலாம் இடம் - **எம்.ஏ. நெத்மி மெத்சலா மனமேந்ர**, லக்சபான மகா வித்தியாலயம்; இரண்டாம் இடம் - **பி.கே. ரச்சிகா றினுஷா பியன்வல**, வாரியபொல ஸ்ரீ சுமங்கல வித்தியாலயம் மற்றும் மூன்றாம் இடம் - **எச்.எம். சமாதி வீரசூரிய**, ரத்னாவலி மகளிர் வித்தியாலயம், கம்பஹா

'இன்றும், எதிர்வரும் தலைமுறைகள் மத்தியிலும், அனைவரின் வாழ்க்கைத்தரத்தை மேம்படுத்துவதற்கு உணவின் ஆற்றலை வெளிக்கொண்டு வருதல்' எனும் நோக்கத்தை முன்னெடுத்துச் செல்கின்ற நெஸ்லே, உயர் தர உணவு மற்றும் பான வகைகளுடன் இளமை முதல் முதுமை வரை தலைமுறை தலைமுறையாக இலங்கை மக்களை வளப்படுத்தியுள்ளது. 1906 ஆம் ஆண்டில் இலங்கையில் தனது செயல்பாடுகளை ஆரம்பித்துள்ளதுடன், இன்று இலங்கை மக்களின் வாழ்வுகளில் ஒரு உள்ளங்கமாகவே நெஸ்லே மாறியுள்ளது. இலங்கையில் விற்பனை செய்யப்படுகின்ற அதன் தயாரிப்புக்களின் 90% இற்கும் மேற்பட்டவற்றை, கடுமையான பாதுகாப்பு மற்றும் தரக்கட்டுப்பாட்டு நடைமுறைகளுடன், குருணாகலிலுள்ள அதன் அதிநவீன தொழிற்சாலையில் உற்பத்தி செய்து வருகின்றது.

---


| | | | |
|---|---|---|---|
| நிறுவன தொடர்பாடல்கள் | ஸ்நேகா விக்கிரமசிங்க | +94763131309 | Sneha.Wickramasinghe@lk.nestle.com |
| நிறுவன பொது விவகாரங்கள் | தமித குலதுங்க | +94777915949 | Damitha.Kulatunga@lk.nestle.com |